நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அந்த அடிப்படையிலே தேவையான பதவிகளை உருவாக்குவோம்; அல்லது தேவையான நபர்களை நாம் வைத்துக்கொள்வோம்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே இதைப்பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் வருடாவருடம் பள்ளிகள் திறந்து இரண்டு மாதம் மூன்று மாதங்கள் கழித்துத்தான் பாடப் புத்தகம் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. ஆகவே, இதையும் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டாவது அந்தப் பாடப் புத்தகங்கள் குறித்த காலத்தில் கிடைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, பாடப்புத்தகங்கள் குறித்த காலத்தில் வருவதற்கான அந்த நடவடிக்கைகளை அந்த நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பதவிகளை நிரப்புவது என்பது வேறு ; பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கான ஒரு அடிப்படையிலேதான் இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டன. அந்தப் பணியை அவர்களிடமிருந்து எடுக்க வேண்டுமென்று நாம் நினைக்கின்றோம்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.